## மாணவர் தரநிலை அறிக்கை
## வகுப்பு *1-5*
## ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல்கள்

**வழிகாட்டுதல்கள்:**

1. குழந்தைகளின் தரநிலை அறிக்கை, பருவ இறுதியில் பெற்றோருக்கு அளிக்கப்பட வேண்டும்.
2. **பெற்றோரிடமிருந்து கையொப்பம்** பெறப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு **பருவ இறுதி**யிலும் தரநிலை அறிக்கையினைப் **பெற்றோருக்கு** அளிக்கும்வகையில் பாதுகாத்து வைக்கப்பட வேண்டும்.

இணைய முகவரி : **emis.tnschools.gov.in**.

தரநிலை அறிக்கையை நிரப்புவதற்கான தரவுகளை *EMIS* வலைத்தளத்திலிருந்து *08.02.2024*ஆம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தரநிலை அறிக்கையை நிரப்புவதற்கான காணொலி இணைப்பு:
**https://www.youtube.com/watch?v=ZFWpjrlc1k0**

**ஆசிரியர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்:**

**பக்கம் *1:***

- *UDISE* எண் மற்றும் பள்ளியின் பெயரை நிரப்பவும்.
- மாணவர் பெயர், வகுப்பு & பிரிவு மற்றும் *EMIS* எண்ணை நிரப்பவும்.
- வகுப்பு ஆசிரியரின் பெயரை நிரப்பவும்.

**பக்கம் *2:***

- **பகுதி *1:* கல்விச் செயல்பாடுகள் – கற்றல்நிலை (*1-5* வகுப்புகளுக்கு)**

  **பருவம்-*1:* வகுப்பு *1-3***

  - ஒவ்வொரு பாடத்திலும் குழந்தைகளின் கற்றல்நிலையினை *EMIS* வலைதளத்தைப் பார்த்து நிரப்பவும். *EMIS* வலைதளத்தின் வாயிலாகத் தரநிலையைத் தெரிந்துகொள்ள **இணைப்பு *1*** -ஐப் படிக்கவும்.
  - *EMIS* **வலைதளத்தில்** மாணவர்களின் கற்றல்நிலை **குறிப்பிடப்படவில்லையெனில் ஆசிரியர்கள்**, மாணவர்களின்

கற்றல்நிலையை ஒவ்வொரு பாடத்திலும் **தாங்களே நிரப்பிக் கொள்ளலாம்.**

- **அரும்புநிலை**, **மொட்டுநிலை**, **மலர்நிலை**களுள் உரியதை நிரப்பவும்.

**பருவம்**-*1:* **வகுப்பு** *4-5*

- குழந்தைகளின் **அடிப்படை**க் **கற்றல்நிலையைக்** *(Baseline learning level)* குறிப்பிடவும்.
- அடிப்படைக் கற்றல்நிலையைத் தெரிந்துகொள்ள **இணைப்பு** *1* -ஐப் படிக்கவும்.
- *EMIS* வலைதளத்தில் மாணவர்களின் அடிப்படைக் கற்றல்நிலை குறிப்பிடப்படவில்லையெனில் ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல்நிலையை ஒவ்வொரு பாடத்திலும் தாங்களே நிரப்பிக் கொள்ளலாம்.
- **அரும்புநிலை**, **மொட்டுநிலை**, **மலர்நிலை** மற்றும் **வகுப்புநிலைக**ளுள் உரியதை நிரப்பவும்.

**பருவம்**-*2:* **வகுப்பு** *1-5*

- குழந்தைகள், தொகுத்தறி மதிப்பீட்டில்*(SA)* *60* **க்கு** *42* மதிப்பெண்களுக்குக் குறைவாகப் பெற்றிருந்தால் பருவம்-*1*இல் குறிப்பிட்டிருந்த அதே கற்றல்நிலையைக் குறிப்பிடவும்.
- *42* **மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருந்தால்**, பருவம்-*1* இல் குறிப்பிட்டிருந்த கற்றல்நிலைக்கு **அடுத்த கற்றல்நிலைக்கு மாற்றிக் குறிப்பிடவும்**.




| பாடங்கள் | கல்விச் செயல்பாடுகள் – கற்றல்நிலை | | |
|---|---|---|---|
| | பருவம் 1 | பருவம் 2 | பருவம் 3 |
| தமிழ் | மலர் | | |
| ஆங்கிலம் | மொட்டு | | |
| கணக்கு | மலர் | | |

பருவம் 1




| பாடங்கள் | கல்விச் செயல்பாடுகள் – கற்றல்நிலை | | |
|---|---|---|---|
| | பருவம் 1 | பருவம் 2 | பருவம் 3 |
| தமிழ் | மலர் | மலர் | |
| ஆங்கிலம் | மொட்டு | மலர் | |
| கணக்கு | மலர் | வகுப்புநிலை | |

பருவம் 2

- **பகுதி *2:* கல்விச் செயல்பாடுகள் – தரநிலை *(1-3* வகுப்புகளுக்கு*)***

  *சிறுபான்மை மொழியைப் பயிலும் குழந்தை எனில், விருப்பமொழி என்ற பகுதியில் மொழியின் பெயரைக் குறிப்பிடவும்.*

  **பருவம் *1:***

  - *EMIS* வலைதளத்திலிருந்து ஒவ்வொரு பாடத்திற்குமான குழந்தையின் தரநிலையைக் கண்டறிந்து நிரப்பவும்.
  - *EMIS* வலைதளம் வாயிலாகத் தரநிலையைத் தெரிந்துகொள்ள இணைப்பு *1* -ஐப் படிக்கவும்.
  - ***EMIS* வலைதளத்தில்** தரநிலை விவரங்கள் **இல்லையெனில்** நீங்கள் **பதிவு செய்த மதிப்பெண்களுக்கான** *(100* மதிப்பெண்கள்*)* தரநிலை விவரங்களைப் **பதிவு** செய்யவும்.

  **பருவம் *2:***

  - ***EMIS*** இணைய தளத்திலிருந்து **வளரறி மதிப்பீடு *40*க்கான மதிப்பெண்**களை எடுக்கவும். *(*இணைப்பு *1* -ஐப் பார்க்கவும்.*) EMIS* இணைய தளத்தில் தரநிலை விவரங்கள் இல்லையெனில் நீங்கள் பதிவு செய்த மதிப்பெண்களுக்கான தரநிலை விவரங்களைக் கணக்கில் கொள்ளவும்.
  - **வினாத்தாள் வாயிலாகச்** செய்யப்பட்ட தொகுத்தறி மதிப்பீடு*(SA)* ***60*க்கான மதிப்பெண்களைக்** கணக்கிடவும்.
  - வளரறி, தொகுத்தறி *(40+60)* மதிப்பீடுகளின் மதிப்பெண்களைக் கூட்டவும்.
  - கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் தரநிலையைக் கணக்கிட்டு நிரப்பவும்.

*(தரநிலை விவரம்: A1 = 91-100 | A2 = 81-90 | B1 = 71-80 | B2 = 61-70 | C1 = 51-60 | C2 = 41-50 | D = 33-40 | E1 = 21-32 | E2 = 20 & அதற்கும் கீழ்)*

- **பகுதி *2 :* கல்விச் செயல்பாடுகள் - தரநிலை *( 4 & 5* வகுப்புகளுக்கு*)***

  சிறுபான்மை மொழியைப் பயிலும் குழந்தை எனில், *விருப்ப*மொழி என்ற பகுதியில் மொழியின் பெயரைக் குறிப்பிடவும்.

  **பருவம் *1:***

  - **உங்கள் பதிவுகளில்** இருந்து ஒவ்வொரு பாடத்திற்குமான **தரநிலை**களை நிரப்பவும்.
  - அல்லது பருவம் *1* இன் வளரறி மதிப்பீடுகளை*(40* மதிப்பெண்கள்*)* *EMIS* வலைதளம் வாயிலாகவும் தொகுத்தறி மதிப்பீட்டை*(60* மதிப்பெண்கள்*)* உங்கள் பதிவுகளில் இருந்தும் அறிந்து **வளரறி**, **தொகுத்தறி** *(40+60)* மதிப்பீடுகளின் **மதிப்பெண்களைக் கணக்கிட்டு** அதன் அடிப்படையில் **தரநிலை**களை நிரப்பவும்.

  **பருவம் *2:***

  - ***EMIS*** இணைய தளத்தில் உள்ள **வளரறி மதிப்பீடு *40***க்கான மதிப்பெண்களை எடுக்கவும். *EMIS* இணைய தளத்தில் தரநிலை விவரங்கள் இல்லையெனில் நீங்கள் பதிவு செய்த மதிப்பெண்களுக்கான தரநிலை விவரங்களைக் கணக்கில் கொள்ளவும்.
  - **வினாத்தாள் வாயிலாகச்** செய்யப்பட்ட **தொகுத்தறி மதிப்பீடு *60***க்கான மதிப்பெண்களை எடுக்கவும். **வளரறி**, **தொகுத்தறி** *(40+60)* மதிப்பீடுகளின் மதிப்பெண்களைக் **கூட்டவும்**.
  - கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் தரநிலையைக் கணக்கிட்டு நிரப்பவும்.

*(தரநிலை விவரம்: A1 = 91-100 | A2 = 81-90 | B1 = 71-80 | B2 = 61-70 | C1 = 51-60 | C2 = 41-50 | D = 33-40 | E1 = 21-32 | E2 = 20 & அதற்கும் கீழ்)*

**பகுதி 2**

| பாடங்கள் | கல்விச் செயல்பாடுகள் – தரநிலை* | | |
|---|---|---|---|
| | பருவம் 1 | பருவம் 2 | பருவம் 3 |
| தமிழ் | B1 | A1 | |
| விருப்ப மொழி ______ | - | - | |
| ஆங்கிலம் | C1 | B1 | |
| கணக்கு | A1 | A2 | |
| அறிவியல் | | | |
| சமூக அறிவியல் | | | |

*தரநிலை விவரம்: A1 = 91–100 | A2 = 81–90 | B1 = 71–80 | B2 = 61–70
C1 = 51–60 | C2 = 41–50 | D = 33–40 | E1 = 21–32 | E2 = 20 & அதற்குக் கீழ்

***Sample Grade 1-3***

**பகுதி 2**

| பாடங்கள் | கல்விச் செயல்பாடுகள் – தரநிலை* | | |
|---|---|---|---|
| | பருவம் 1 | பருவம் 2 | பருவம் 3 |
| தமிழ் | B1 | A1 | |
| விருப்ப மொழி ______ | - | - | |
| ஆங்கிலம் | C1 | B1 | |
| கணக்கு | A1 | A2 | |
| அறிவியல் | - | - | |
| சமூக அறிவியல் | - | - | |

*தரநிலை விவரம்: A1 = 91–100 | A2 = 81–90 | B1 = 71–80 | B2 = 61–70
C1 = 51–60 | C2 = 41–50 | D = 33–40 | E1 = 21–32 | E2 = 20 & அதற்குக் கீழ்

***Sample Grade 4&5***

**பக்கம் *3:***

- பகுதி *3:* கல்வி இணைச் செயல்பாடுகள்:
  - வகுப்பில் குழந்தைகளின் செயல்திறன் மற்றும் பங்கேற்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு திறன்களுக்கும் உரிய தரநிலை விவரங்களை நிரப்பவும்.
  - தரநிலை விவரங்களாவன:
    - *Excellent - A-* அருமை *Very Good - B-* மிக நன்று
    - *Good - C-* நன்று *Satisfactory - D-*நிறைவு
    - *Needs Improvement - E-*முன்னேற்றம் தேவை

**பகுதி 3**

| கல்வி இணைச் செயல்பாடுகள்** | பருவம் 1 | பருவம் 2 | பருவம் 3 |
|---|---|---|---|
| வாழ்வியல் திறன்கள் | A | A | |
| மனப்பான்மைகளும் மதிப்புகளும் | B | A | |
| நன்னலம் & உடற்பயிற்சி | A | B | |
| பாடஇணைச் செயல்பாடுகள் | B | A | |


**தரநிலை: A – அருமை, B – மிக நன்று, C – நன்று,
D – நிறைவு, E – முன்னேற்றம் தேவை

- **<u>இதர விவரங்கள்</u>**:
    - குழந்தைகள், **பள்ளிக்கு வருகைபுரிந்த நாள்களின் எண்ணிக்கை / பள்ளி வேலை நாள்களின் எண்ணிக்கையை** நிரப்பவும். (எ.கா. 72/77)
    - மாணவருக்கான குறிப்பு: வகுப்பறையில் மாணவர்களின் செயல்திறன் அல்லது நடத்தையின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் **ஒன்றை** நிரப்பவும்.
        - நன்று! வகுப்பறைச் செயல்பாடுகளில் ஆர்வமுடன் பங்கேற்கிறார்.
        - குழுச் செயல்பாடுகளில் சிறப்பாக ஈடுபடுகிறார்.
        - [குறிப்பிட்ட பாடம்] -இல் மாணவரின் புரிதல் சிறப்பாக உள்ளது.
        - கணிதத்தில் சிறந்து விளங்குகிறார்.
        - *[குறிப்பிட்ட பகுதி]* -இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளார்.
        - பருவத்தின் தொடக்கத்திலிருந்து [குறிப்பிட்ட பாடம்] -இல் முன்னேற்றம் அடைந்துள்ளார்.
        - [குறிப்பிட்ட பாடம்] -இல் கூடுதல் கவனம் தேவை.
        - [குறிப்பிட்ட பாடம்] இல் அடிப்படைக் கருத்துகளைப் புரிந்துகொள்ள கூடுதல் பயிற்சி மற்றும் பெற்றோரின் கூடுதல் ஆதரவு தேவை.
        - பணிகளைச் சரியான நேரத்தில் முடித்தல் வேண்டும்.
        - இக்குறிப்புகளைத் தவிர தங்கள் மாணவர்களைப் பற்றிய வேறு ஏதேனும் குறிப்பு இருப்பின் அதை நிரப்பிக் கொள்ளலாம்.
- **ஒப்பங்கள்**: ஒவ்வொரு பருவத்திலும் வகுப்பாசிரியர், தலைமையாசிரியர் மற்றும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பமிட வேண்டும்.


## <u>இணைப்பு:*1*</u>

**emis.tnschools.gov.in இருந்து மாணவர்களின் வளரறி *(FA)* மற்றும் தொகுத்தறி *(SA)* மதிப்பெண்களைத் தரவிறக்கம் செய்யும்முறை.**


<u>படி *1:*</u> ஆசிரியர்கள், தங்கள் **பள்ளியின் *UDISE* எண் மற்றும் கடவுச்சொல்லைப்** பயன்படுத்தி *EMIS* வலையதளத்தில் உள்நுழைய வேண்டும்.





<u>படி *2:*</u> உள்நுழைந்தவுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடக்கப்பக்க தோற்றத்தில் ***Registers*** இல் இருந்து ***"Staff Registers"*** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.



**<u>படி</u>** *3: Staff Registers* இல் இருந்து *“EE Academic Registers”* என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.




**<u>படி</u>** *4:* கீழே கேட்கப்பட்டுள்ள விவரங்களை நிரப்பவும். பள்ளியின் பருவம் *1* மற்றும் பருவம் *2*ற்கான விவரங்கள் தனித்தனியாகக் காட்டப்படும்.




**<u>படி</u>** *5:* இணையவழியில் மதிப்பீடுகள் செய்யப்பட்டிருப்பின் அனைத்து மதிப்பெண்களும் *EMIS* வலைத்தளத்தில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு பதிவாகியிருக்கும்.

இந்தத் தரவுகளை வகுப்பு மற்றும் **பருவம்வாரியாக** *pdf* அல்லது *excel* வடிவில் **பதிவிறக்கமும்** செய்து கொள்ளலாம்.

| Subjects | FA(A) (Total 20) | FA(B) (Total 20) | FA TOTAL (OUT OF 40) | SA TOTAL (OUT OF 60) | Level | Grade | TOTAL MARKS (OUT OF 100) |
|---|---|---|---|---|---|---|---|
| TAMIL | 14 | 15 | 29 | 48 | Arumbu | B1 | 77 |
| ENGLISH | 14 | 20 | 34 | 24 | Arumbu | C1 | 58 |
| MATHS | 14 | 20 | 34 | 48 | Arumbu | A2 | 82 |
| TAMIL | 14 | 20 | 34 | 60 | Arumbu | A1 | 94 |
| ENGLISH | 14 | 20 | 34 | 36 | Arumbu | B2 | 70 |
| MATHS | 15 | 20 | 35 | 48 | Arumbu | A2 | 83 |

மதிப்பீடுகள் இணையவழியில் முடிக்கப்படாமல் விடுபட்டிருப்பின் கீழே காட்டப்பட்டுள்ளவாறு மதிப்பெண்கள்/தரநிலைகள் குறிப்பிடப்படாமல் இருக்கும். இங்கு நீங்கள் பதிவு செய்த மதிப்பெண்களுக்கான தரநிலை விவரங்களைக் கணக்கில் கொள்ளவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| TAMIL | 20 | 15 | 35 | 36 | Mottu | B1 | 71 |
| ENGLISH | 19 | 20 | 39 | - | Mottu | - | - |
| MATHS | 20 | 20 | 40 | - | Mottu | - | - |
| TAMIL | 15 | - | - | - | Arumbu | - | - |
| ENGLISH | 15 | - | - | 12 | Arumbu | - | - |
| MATHS | 15 | 15 | 30 | 36 | Arumbu | B2 | 66 |

| வகுப்புகள் | தரவுகள்/தகவல்கள் |
|---|---|
| வகுப்பு *1-3* | பருவம் *1 -* கற்றல்நிலைகள் |
| | பருவம் *1 FA, SA,* மொத்த மதிப்பெண்கள் மற்றும் தரநிலை. |
| | பருவம் *2 FA* மதிப்பெண்கள். |
| வகுப்பு *4 & 5* | அடிப்படைக் கற்றல்நிலைகள். *(Baseline learning levels)* |
| | பருவம் *1 FA* மதிப்பெண்கள். |
| | பருவம் *2 FA* மதிப்பெண்கள். |

தரநிலை அறிக்கையை நிரப்புவது குறித்து ஏதேனும் **சந்தேகம் இருப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்/வட்டார வளமைய அலுவலர்கள்*/TN EE fellows* ஐ அணுகி** சந்தேகங்களை **நிவர்த்தி** செய்து கொள்ளலாம். மேற்கொண்டு ஏதேனும் **சந்தேகங்கள்** இருப்பின் *14417* எண்ணில் தொடர்பு கொள்ளவும்.